செ.வெ.எண்:18 நாள்: 07.06.2017

**நிலஅளவை ஆவணங்கள் நவீன மயமாக்கும் திட்டத்தின் கீழ் (DILRMP) கரூர் மாவட்டம் கரூர், குளித்தலை நகர பிளாக் வரைபடங்களை தனியார் நிறுவனம் மூலம் கணினியில் பதிவு செய்தல் – கரூர் மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு.**

தமிழ்நாடு அரசு நிலஅளவை ஆவணங்கள் நவீன மயமாக்கும் திட்டத்தின் கீழ் (DILRMP) கரூர் மாவட்டம் கரூர், குளித்தலை நகர பிளாக் வரைபடங்களை கணினியில் பதிவு செய்ய தனியார் நிறுவனங்கள் மூலம் கணினி இயக்குபவர்கள் (Data Entry Operator) நியமனம் செய்து பணிகள் துவங்க ஆணையிடப்பட்டுள்ளது, இதற்காக கரூர் மாவட்டத்தில் 13 கணினி இயக்குபவர்கள் தனியார் நிறுவனத்தின் மூலம் தேர்வு செய்யப்பட உள்ளனர். இவர்களுக்கு குறைந்தபட்சம் 10ஆம் வகுப்பு தேர்ச்சி மற்றும் கணினி அறிவுடன் தட்டச்சு செய்ய தெரிந்திருக்க வேண்டும் (ஆங்கிலம் மற்றும் தமிழ்) என தகுதி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மேலும், வரைபட மென்பொருள் (Mapping Software) கையாள்வதில் குறைந்தபட்சம் ஓராண்டு காலம், முன்அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

எனவே, மேற்கண்ட தகுதியுடைய 13 கணினி இயக்குபவர்களை தேர்வு செய்து பணிகள் மேற்கொள்ள விருப்பம் உள்ள தனியார் நிறுவனங்களிடமிருந்து உத்தேச விலைப்புள்ளிகள் வரவேற்கப்படுவதாக கரூர் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**

**கரூர்.**